ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# வண்ணதாசன் படைப்பில் வெளிப்படும் நாடகப்போக்குகள்

[1]அ.சாந்தி ராணி
முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
[2]முனைவர் சா.சுஜாதா
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் உயராய்வு மையம், ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்

65

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் மொழியின் தனிச்சிறப்பான கலைவடிவங்களில் ஒன்றாக இருப்பது நாடகக்கலை. தமிழக மக்களின் வாழ்க்கை நிலையினையும், பண்பாட்டினையும் எடுத்துரைப்பதில் முக்கியப் பங்கு வகிப்பது. நாடகக்கலை பற்றியும் அதன் வளர்ச்சி நிலைகள் இன்றைய படைப்புகளில் வெளிப்படுகின்ற நிலையினைப் பற்றியும் அறியப்படுவதாக இக்கட்டுரை அமைகின்றது. வண்ணதாசனின் சிறுகதைப் படைப்புகளில் உள்ள பாத்திரங்கள் உரையாடுகின்ற நிலையில் வெளிப்படும் நாடகப்பாங்கினை அறிவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

நாடக இலக்கணம், வண்ணதாசன் நாடகப்பாங்கு, மனித நடத்தை, மனநிலையும் ஆறுதலும், வார்த்தைகளின் வெளிப்பாடு, சமூகத்தின் சிந்தனை.

**முன்னுரை**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மொழியானது இயல், இசை, நாடகம் என்று முப்பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பெற்றது. குறிப்பாக நாடகத் தமிழானது பழங்காலம் தொட்டே வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றது. நாடகக்கலையே உலகத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைக் காட்டும் காலக்கண்ணாடி போன்று செயல்படுகின்றது. நாடகக் கலையின் வளர்ச்சியும் வேகமும் இன்று அதிகமாகக் காணப்படுகின்ற சூழ்நிலையில் தமிழ்நாட்டில் மட்டுமன்றி பிற மாநிலங்களிலும் வளர்ச்சியடைந்து உயர்ந்து கொண்டிருக்கின்றது. அத்தகைய நாடக்கலை பற்றியும் இக்காலக் கவிஞர்களில் ஒருவரான வண்ணதாசனின் படைப்புகள் வழி வெளிப்படுகின்ற நாடகப் போக்குகள் பற்றியும் அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நாடக இலக்கணம்**

நாடகம் என்ற சொல்லைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் Drama. கிரேக்கச் சொல்லே இதன் அடி மூலமாகும். இதன் பொருள் “ஒன்றைச் செய் அல்லது ஒன்றைப் போலச் செய்” என்பதேயாகும்.

இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடு + அகம் = நாடகம் என்று வழக்காயிற்று. சிறந்த காப்பிய நூல்களுள் ஒன்றான சிலப்பதிகாரமே அதிகமாக நாடகக்கலை பற்றியும் காட்சிகளைப் பற்றிய குறிப்புகளையும் அரங்க அமைப்புகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றது. சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லாரும்

நாடகத்தமிழ் பற்றிக் கூறும்பொழுது பரதம், அகத்தியம் என்னும் நூல்கள் இருந்ததை குறிப்பிடுகின்றார்.

**வண்ணதாசன் நாடகப்பாங்கு**

நவீனத் தமிழ்ச் சிறுகதை உலகில் மிகுந்த கவனம் பெற்ற எழுத்தாளராகத் திகழ்பவர் வண்ணதாசன். வண்ணதாசன் தன் சிறுகதைப் படைப்புக்களில் படைத்துள்ள பாத்திரங்களில் காணப்படுகின்ற உரையாடல்கள் பல நேரங்களில் நாடகத்திறனை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருப்பதை அறியமுடிகின்றது.

வண்ணதாசன் "**தோட்டத்திற்கு வெளியிலும் சில பூக்கள்**" பகுதியில் தன் வீட்டுப் பெண் துன்பப்படும் பொழுது அதைக் கண்டு மனம் கலங்கும் வீட்டு ஆணின் சூழ்நிலையினை எடுத்துக்காட்டும் விதமானது நாடகம் நடப்பது போன்ற மனநிலை நமக்கு ஏற்படுவதை அறியமுடிகின்றது. இதனை,

> **"இவள் அழுவாள் என்று எதிர்பார்த்தது போல, இவள் அழுதிருக்கிறாளா என்று பார்த்துத் திருப்திப்பட்டுக் கொள்வது போல, சரசுவின் பக்கத்தில் வந்து தலைமாட்டில் உட்கார்ந்து, தலையணையில் நனைகிற முகத்தை ரொம்ப உக்கிரமாகக் கன்னத்தில் கையைக் கொடுத்துத் திருப்புவான். எதுக்கு அழுதுகிட்டு இருக்கே, சொல்லு, சொல்லு என்று திரும்பித் திரும்பிக் கேட்பான். உன்னைப் பிடிக்கவில்லை, என்று சொல்லாமல் குத்தி வாங்குகிறது போல இருக்கும் அது."**[1]

கூறுகிறார். மனிதன் எல்லா நேரங்களிலும் அமைதியையும் ஆறுதல்களையும் தேடுவதில்லை. மனம் கலக்கம் கொள்ளும் பொழுது மட்டுமே மனம் சிலரின் ஆறுதல்களை எதிர்பார்க்கிறது. சாதாரண குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் காணும் பொழுது அழுவதும் சிரிப்பதும் இயல்பான ஒன்றாகவும் அதற்கு ஆறுதல் படுத்தும் உறவுகளும் புதிதான ஒன்றும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி இயற்கையான நிகழ்வுகளைப் பதிய வைக்கிறார்.

**மனித நடத்தை**

மனித வாழ்க்கை நல்ல முறையில் அமைய வேண்டுமெனில் முன்னோர்கள் கூறிய உயரிய மதிப்பீடுகளைப் பின்பற்றி அதன்படி வாழவேண்டும். மனிதனின் வாழ்க்கையை செம்மைப்படுத்தும் நோக்கில் நம்சான்றோர்களால் எழுதப் பெற்றது. சமுதாயம் செம்மையானதாக இருக்க வேண்டுமாயின் மனிதன் நற்சிந்தனைகளையும், நற்செயற்பாடுகளையும் உள்ளத்தில் வளர்த்தல் வேண்டும். அறிவினால் வாழ்வைத் தீர்மானித்துவிட ஒரு போதும் இயலாது.

"**கூண்டுக்கு வெளியே ஒரு புல்வெளி**" சிறுகதையில் வண்ணதாசன் இரு பாத்திரங்கள் உரையாடுகின்ற நிலையினை எடுத்துக்காட்டுவது அச்சூழல் நடைபெறுகின்ற இடத்திற்கே நம்மை அழைத்துச் செல்லுகின்ற நிலையே காணப்படுகின்றது.

> **"மனுஷனா இருக்க வேண்டிய நேரத்தில் மனுஷனா, ராட்சசனா இருக்க வேண்டிய நேரத்தில் ராட்சசனா இருந்தால் போதாதா, என்று பகவதி சொன்னாள். சொல்லும்போது யாரையும் பார்க்காமல் முகம் எங்கேயோ பார்த்துக்கொண்டு இருந்தது. இதுவும் அவளுடைய இயல்புதான் மிகவும் தீவிரமான ஆழமான நேரங்களில் பேசும் போதெல்லாம் யார்**

**முகத்தையும் அவள் பார்த்துப் பேசுவதே இல்லை.”[2]**

என்று கூறுகிறார்.

வண்ணதாசன் **“மதுரம்”** கதைப்பகுதியில் மனித மனம் மாறுவதையும், இடத்திற்கு ஏற்றாற்போல் செயல்படுவதையும் குற்றம் சாட்டுகிறார். ஓரிடம் தாண்டி வேறொரு இடம் செல்லும்போது மனிதனை மனிதனே மறக்கக்கூடிய அளவிற்கு மாற்றத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறான் என்பதை,

**“இந்தக் காலத்தில் தொந்தரவு இல்லாத மனுஷனை யாருக்கு அடையாளம் தெரியுது? அவர் அருணாச்சலத்தைப் பார்த்து மேலும் நெருக்கமாகச் சிரித்தார். வேறு ஆள் ஆகியிருந்தார் முகம், குரல் எல்லாமே மாறியிருந்தது. ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தாண்டி இன்னொரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்ததும் ஆட்கள் இப்படி ஆகிவிடுவார்கள் போல என்று அருணாச்சலம் அவர் முகத்தைப் பார்த்தார்”[3]**

என்று கூறுகிறார். பிரச்சனை இல்லாத மனிதர்கள் இவ்வுலகில் இல்லை இடத்திற்குத் தகுந்தாற்போல் தன்னை மாற்றிக்கொண்டு செயல்பட தொடங்குகிறான். அது ஒவ்வொருவரின் சுயமதிப்பினைப் பொறுத்தே அமைகின்றது.

**மனநிலையும் ஆறுதலும்**

வண்ணதாசன் **“கிருஷ்ணன் வைத்த வீடு”** என்னும் சிறுகதைப் பகுதியில் மனதளவில் வருந்துகின்ற ஒருவருக்கு ஆறுதல் கூறுகின்ற நிலையினை எடுத்துக் காட்டும் விதமானது இன்னும் சிறப்பிற்குரியதாக இருப்பதை அறிய முடிகின்றது.

**“அழுகிறதுக்கு எல்லாம் நமக்குக் கட்டுபடியாகாதுக்கா, அடித்தால் வெயில், பெய்தால் மழை அப்படியே போய்க்கிட்டு இருக்கணும். நிற்கப்படாது.”[4]**

என்று கூறுவதில் இருந்து மனிதனுக்கு சங்கடங்கள் வரும் பொழுது அதில் இருந்து துவண்டு விடாமல் வெளியேற வேண்டும் பிரச்சனைகள் நம்மை ஆட்சி செய்ய அனுமதிக்கக் கூடாது. அவை நம்மை ஆட்சி செய்ய விட்டுவிட்டால் அழிவுப்பாதைக்கு நம்மை அழைத்துக் கொண்டு சென்று விடும் என்பதை வண்ணதாசன் குறிப்பிடுகிறார்.

நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் சரி என்று குடும்பத்தில் வாழும் தலைவன் எண்ணுதல் முற்றிலும் தவறானது. குடும்பத்தில் கணவன் - மனைவி இருவரும் ஒளிவு மறைவு இன்றி ஒரு பிரச்சனைக்குத் தெளிவான முடிவினை எடுக்க வேண்டும் என்று கூற நினைக்கும்

வண்ணதாசன் **“பெயர் தெரியாமல் ஒரு பறவை”** சிறுகதைப்பகுதியில்,

**“வீட்டு பொம்பளைகிட்ட என்றைக்கு யோசனை கேட்டாரு. இன்றைக்கு கேட்க, அப்படிக் கேட்டாத்தான் எம்புட்டோ இதுக்குள்ளே குடும்பம் முன்னிலைக்கு வந்திருக்குமே. முன்னே பின்னே யோசிக்காம இப்படிச் சொல்லிக்கிட்டிருக்கிற மனுஷனை என்ன பண்ண.”[5]**

என்று கூறுவதின் மூலம் ஒரு பெண்ணின் எதிர்பார்ப்பும் முக்கியத்துவமும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. அன்றைய காலத்தில் இருந்த பெண்ணடிமைத்தனம் இன்றைய சூழலில்

இல்லை என்றாலும். பெண்கள் மீதான அடக்குமுறைகள் இன்றளவும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. சில இடங்களில் பெண்களை இழிவுபடுத்துவதும், பொருட்படுத்தாத சூழலும் நிலவுவதைக் காணலாம்

**வார்த்தைகளின் வெளிப்பாடு**

வண்ணதாசன் **"பெயர் தெரியாமல் ஒரு பறவை"** கதைப்பகுதியில் வார்த்தைகளால் ஏற்படும் பிரச்சனைகளைப் படம் பிடித்துக்காட்டியிருப்பதை,

> **"இந்த வார்த்தையை எல்லாம் இந்த மனிதன் பேசவில்லை. இந்தச் சம்பளம், இந்தச்சம்பளத்தை மீறி நாலு பக்கமும் உதைத்துக் கொண்டு கிடக்கிற வாழ்க்கை இந்த மனுஷனை இப்படிப் பேசச்சொல்லுகிறது. இவன் நம்மிடம் பிரியமாகவே இருந்தான். பிரியமாக இருந்தே இந்த நாலு குழந்தைகளையும் பெற்றான். இப்போதும் பிரியத்துக்குக் குறைச்சலில்லை."**[6]

என்று கூறுகிறார். மனிதன் தானாக எதுவும் பேசுவதில்லை. சூழ்நிலைதான் மனிதனை மாற்றுகிறது பணம் மனிதனின் மதிப்பீட்டினையும் எடுத்துக்காட்டுகிறது. செல்வாக்கில் உயர்ந்தவன் கீழ்நிலையில் இருப்பவனை ஏளனமாகப் பார்க்கும் எண்ணம் இன்றளவும் நிலவிக்கொண்டிருக்கின்றது.

வண்ணதாசன் **"மனுஷா மனுஷா"** வில் மனிதனின் அனுபவ நிலையை,

> **"இந்த விஷயத்தை எவ்வளவு இயல்பாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு இயல்பாக ஆச்சி சொன்னது கூட ஆச்சரியமில்லை அந்தக் காலத்து அனுபவம், அந்தக் காலத்துப் பெருந்தன்மை, அதற்குச் சரியாக இருந்திருக்கும். இந்த விஷயத்தை என்னுடைய வீட்டுக்காரியும் அதே அளவு இயல்புடனும் மரியாதைக்குப் பழுதில்லாமலும் ஏற்றுக் கொண்டது எப்படி என்று விளங்கவில்லை."**[7]

என்று கூறுவதன் மூலம் அந்தக்காலத்தில் இருந்த பொறுமை, பெரியோர்களை மதிக்கும் தன்மை, அவர்கள் கூறும் வார்த்தைக்கு மறுபேச்சு பேசாமல் ஏற்றுக்கொள்ளும் தன்மை, அத்தகைய மனிதமனநிலை இன்று இல்லை என்பதை நாம் அறிய முடிகிறது. அக்காலத்தில் இருந்த பெருந்தன்மையை இன்று காண முடிவதில்லை. எதையும் இயல்பாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்த அந்தக் கால மனிதர்களை இன்று காண்பது அறிதான ஒன்றாக இருக்கின்றது.

**சமூகத்தின் சிந்தனை**

வண்ணதாசன் **"கமழ்ச்சி"**யில் கணவனை இழந்த பெண்ணுக்கு ஏற்படும் அவல நிலைகளையும் சமூகத்தால் அவளுக்கு ஏற்படும் அவச்சொற்களையும் எடுத்துரைக்கும்பொழுது ஏற்படும் உரையாடலைக் குறிப்பிடும்பொழுது,

> "**இன்னும் எதுக்கு சுப்பையா அதை மூலையில் வச்சுக் கும்பிட்டுக்கிட்டு இருக்கே ஊரு உலகத்தில உனக்குத் தெரிஞ்சபேரு எத்தினி இருப்பாங்க கஷ்டப்பட்டவன், நஷ்டப்பட்டவன் இருந்தால் வச்சுப் பொழச்சுக்கச் சொல்லித் தூக்கிக் கொடுத்திர வேண்டிய தானே. கடலு வத்திப்போன இடத்தில் எம்புட்டுக் காலம் உப்பைக்கொட்டி வச்சுப் பார்த்துக்கிட்டு கிடப்ப. பரமனின் அம்;மா அவ்வளவு வருத்தத்திலும் அப்படித்தான் இப்படி எதாவது ஜாடையாகச்**

> **சொல்வாளே தவிர, பாண்டியம்மாளைப் பற்றி இதுவரை இந்த இரண்டு சொச்ச வருடத்திலும் இவன் காதுபட அசிங்கமாக எதுவும் சொன்னதில்லை."[8]**

என்கிறார். குடும்பம் என்னும் உறவுக்குள் நுழையும் நிமிடம் அது. இறுதி வரை குடும்ப உறவாக, எந்த இழப்பும் இல்லாமல் இருந்தால் மட்டுமே சமூகம் நம்மை ஏற்றுக்கொள்ளும். இதில் கணவன் இல்லாமல் மனைவியோ, மனைவி இல்லாமல் கணவனோ வாழ்ந்தோமேயானால் இதை விடத்துன்பம் வேறு எதுவுமில்லை. சமூகத்தின் பார்வையும் தவறாகவே இருக்கும். இதன் நிமித்தம் விழுமியத்தில் பாதிப்புகள் தான் ஏற்படும்.

வண்ணதாசன் "**சமவெளி**" சிறுகதையில் குறிப்பிடும்பொழுது,

> **"அந்தப் பொம்பளப்பிள்ளை பாரம் உங்களுக்கும் குறைந்த மாதிரி இருக்கும் இந்தப் பத்து வருஷம் கஷ்டப்பட்டது மறந்து போக எனக்கும் தோதுவாகப் போகும். அவனுடைய வார்த்தைகளைக் கேட்டதும் நல்லசாமிக்கு ரொம்ப துக்கமாக இருந்தது. யாருடைய கஷ்டத்;தை முன்னிட்டு தான் இப்படித் துக்கம் கொள்கிறோம் என்று அவனுக்குத் தெரியாவிட்டாலும் அது அந்த நேரத்தின் பளுவை நிறுத்தச் சொல்லி எல்லோரையும் பேசவிடாமல் ஆக்கியது."[9]**

என்று கூறுகிறார். குடும்ப வாழ்க்கையில் தனிமைப்படுத்தப்பட்டால் ஆண்களை விட பெண்களுக்கே அதிகமான பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதை அறிய முடிகிறது. ஏனெனில் சமூகத்தில் தனி மனிதனாகவும், குடும்பமாகவும் சேர்ந்து செய்ய வேண்டிய பணிகள் அதிகம் தான். அவ்வாறு இல்லாமல் குடும்ப வாழ்க்கையில் இருந்து தனிமைப் படுத்தப்பட்டால் குடும்பம் என்னும் நிறுவனத்தில் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய பங்கும், பணிகளும் சிதைந்துவிடும். சமுதாயத்தின் அடிப்படை அலகாகச் செயல்படும் குடும்பம் என்ற நிறுவனம் கட்டுக்கோப்பாகச் செயல்படுதல் மிக அவசியம்.

**முடிவுரை**

எனவே நாடகக் கலையானது இன்னும் முன்னேற்றம் காணும் நோக்கத்தில் பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் கலையினை வளர்க்கும் பொருட்டு கலைநிகழ்ச்சிகளும் நாடகங்களும் இன்றளவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்றைய தலைமுறையினரால் அடுத்த தலைமுறையினருக்கு கடைத்தப்படுகின்ற தொடர் நிகழ்விற்கு உதரணமாகவே கல்வி நிலையங்கள் செயல்படுவதை அறிய முடிகின்றது. இதன் மூலம் நாடக்கலையானது வளர்ச்சி பெற்று உயர்நிலைக்குச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்புகள்**

1. வண்ணதாசன், "தோட்டத்திற்கு வெளியிலும் சில பூக்கள்", ப:22
2. வண்ணதாசன், "கிருஷ்ணன் வைத்த வீடு", ப:58
3. வண்ணதாசன், "மதுரம்", ப:25
4. வண்ணதாசன், "கிருஷ்ணன் வைத்த வீடு", ப:66
5. வண்ணதாசன் "பெயர் தெரியாமல் ஒரு பறவை", ப:96

6. மேலது ப:53
7. வண்ணதாசன், “மனுஷா மனுஷா”, ப:62
8. வண்ணதாசன், “கமழ்ச்சி”, ப:57
9. வண்ணதாசன், “சமவெளி”, ப:36

**துணை நூற்பட்டியல்**

1. வண்ணதாசன், “தோட்டத்திற்கு வெளியிலும் சில பூக்கள்”, “கிருஷ்ணன் வைத்த வீடு”, “மதுரம்”, “பெயர் தெரியாமல் ஒரு பறவை”, மனுஷா மனுஷா”, “கமழ்ச்சி”, “சமவெளி”, சந்தியா பதிப்பகம், புதிய எண் 77, 53வது தெரு, 9வது அவென்யூ, அசோக் நகர், சென்னை – 600 083